24-03-2025.
S.C.No.11/2021

Crl.M.P.4465/2023 மனுவானது 11.12.2023ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் அ.சா.3 அலெக்ஸ் மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.
Accused present.
எதிரி குறுக்கு விசாரணை -

இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என்னுடைய அண்ணன் என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் சம்பவ இடத்தில் இருந்தேன். சம்பவத்தன்று எங்கள் குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக சேர்ந்து எதிரி வீட்டிற்குச் சென்றோம் என்றால் முன்னும் பின்னுமாக சென்றோம். சம்பவம் எதிரியின் வீட்டு முன் வைத்து நடந்தது என்றால் சரிதான். நாங்கள் சண்டை போட்டபோது ஊரே கூட்டம் கூடியது என்றால் சரிதான். எங்களுக்கு எதிரி மீது முன் பகை இல்லை. சம்பவத்தன்று மதியம் அசா2க்கும் எதிரிக்கும் பைக்கில் வரும்போது சாதாரண சண்டை வந்தது என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் எதிரி வீட்டிற்கு சென்று சத்தம்போட்டபோது எதிரி வீட்டிற்குள் இருந்து வந்தார் என்றால் சரிதான். பொதுமனிதர்களை நாங்கள் அழைத்துச்செல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் எதிரியுடன் சண்டைபோடத்தான் எதிரி வீட்டுக்குச் சென்றோம் என்றால் சரியல்ல. எதிரி வீட்டிற்குள் இருந்த கட்டில், பீரோ, டீவி ஆகியவற்றை நாங்கள் சேதப்படுத்தி தீ வைத்தோம் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் இல்லாததால் தீவைத்தவிவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. முதல்விசாரணையில் கூறியதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் இறந்தவர் என் அண்ணன் என்பதால் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த ஆயுதத்தால் குத்தினார் என்றால் கத்தியால் குத்தினார். அந்த கத்தி அரையடி இருக்குமா என்றால் முக்காலடி இருக்கும். எதிரியிடம் எந்த ஆயுதமும் இல்லை என்றும், நாங்கள்தான் ஆயுதத்துடன் சென்றோம் என்றும், அங்கு நடந்த சண்டையில் நாங்கள் வைத்திருந்த ஆயுதம் பட்டுத்தான் என் அண்ணன் இறந்தார் என்றும்

சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.03.24 17:00:40 +0530

Principal District Judge,
Dindigul.